10th December 1959]

SRI A. A. RASHEED : What is the view of the Government with regard to Kunzru Committee's recommendations?

MR. SPEAKER : Government have stated that they have not received that Committee's report. How can they then give their views on it?

Unemployment among the educated

* 91 *Q*.—SRI N. K. PALANISAMI AND SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Centre have formulated any scheme for the educated unemployed and communicated to this Government for their reaction during 1959 ; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Based on the model scheme formulated by the Government of India, a scheme for the establishment of three work and orientation centres for the educated unemployed in this State, one each at Coimbatore, Madurai and Madras, has been sanctioned in August, 1959. A statement[a] showing the salient features of the scheme is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : நம் மாகாணத்தில் எவ்வளவோ பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர், மதுரை சென்டர்களில் ஒவ்வொரு சென்டரிலும் 100 பேர்கள் அமைப்பதாகவும் கிண்டியில் ஆகஸ்ட் 60-லிருந்து 100 பேர்கள் வைத்துக்கொள்வது என்றும் இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் தகவல் என்னிடம் இல்லை.

SRI P. G. MANICKAM : இந்தத் திட்டத்திற்காக மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட உதவி தொகை எவ்வளவு? அத்துடன் நம் மாகாண சர்க்காரால் செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய அரசாங்க உதவி ரூ. 16,97,000 வரையில் கொடுக்கப்படும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தத் திட்டத்தின் மூலமாக பி.யு.ஸி. அதாவது இண்டர்மீடியட் வகுப்பில் தோல்வி அடைந்தவர்களுக்கும் இந்தத் திட்டத்தில் இடமுண்டு. ஆறாவது பாரம் வகுப்பில் தேறினவர்களுக்கும் தேர்வு பெறாமல் இருப்பவர்

---

[a] Printed as Appendix I on pages 458–459 infra.

[10th December 1959

களுக்கும் மற்ற படித்தவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலமாக உதவி கிடைக்குமா? இதே போன்ற வேறு வகுப்பில் படித்து வேலையில்லாது இருப்பவர்களுக்கும் இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட இந்தத் திட்டத்திற்குத்தான் என்னிடம் தகவல்கள் இருக்கின்றன. மற்றவர்களுக்கு வேலை அளிப்பது பற்றிய காரியத்தில் வேறு கவனம் செலுத்தப்படும்.

SRI T. T. DANIEL : Sir, if the Government have not taken so far the statistics of the educated unemployed in our State, will agency of the municipalities and panchayats so that we may know the acuteness of the problem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the Government are quite well aware of the acuteness of the problem, and they have got the statistics.

Unemployment among the educated

*92 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) படித்து வேலையில்லாதிருப்போருக்காக தொழில் பயிற்சி நிலையங்களை மத்திய சர்க்காரின் உதவியோடுகூட சென்னை சர்க்காரால் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது?

(ஆ) மேற்கண்ட ஒவ்வொரு தொழில் பயிற்சி நிலையங்களிலும், வருடந்தோறும் எத்தனை பேர்களுக்கு என்னென்ன விதமான தொழில் பயிற்சிகள் கொடுக்கப்படும்?

(இ) இத் திட்டமானது எப்போது அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A note[a] containing the particulars required is placed on the table of the house.

SRI P. G. MANICKAM : தலைவர் அவர்களே, 1959 நவம்பரில் இதற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. தற்போது இதில் மாணவர்கள் சேர்க்கப்பட்டாகி விட்டார்களா? அப்படியானல் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் எத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோவை, மதுரை இந்த இரண்டு சென்டர்களிலும் 1959 நவம்பரிலிருந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். கிண்டியில் 1960 ஆகஸ்டிலிருந்து மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

---

[a] Printed as Appendix II on page 460 *infra*